ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2117/52 - 2019 අප්‍රේල් මස 04 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.04.04
*2117/52 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 04 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: உது/2/2/10/38.
காணி அமைச்சின் இல.: L/03J/95/FR/173.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், உடதும்பர பிரதேச செயலகப் பிரிவில், கரபகேடிய கிராம அலுவலர் பிரிவில், வின்ச்பீல்ட்பார்க் தோட்டம் என்று அழைக்கப்படும் இடத்தை நில அளவையாளர் நாயகம் அவர்களால் தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. மஹ 6865 இல் காணப்படுகின்ற 14.2860 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித் துண்டுகள் விஸ்தரிப்பதற்காக எடுக்கப்படுகின்றன :

உரிமை கோருவோர் :

| | |
|---|---|
| ஏ. டபிள்யூ. ஐ. அபேகுணசேகர | - 52, சமன நிவச, மெதமஹநுவர |
| ஏ. வீ. பீ. அபேகுணசேகர | - 3/பீ/இஹலவெல, கேங்கல்ல |
| ஏ. டபிள்யூ. எம். எம். அபேகுணசேகர | - 211/ஏ, அகரவிட, கம்பஹா |
| ஏ. வீ. எஸ். அபேகுணசேகர | - 21, பராக்கிரம சமுத்திரய, பொலனறுவை |
| ஏ. வீ. எச். அபேகுணசேகர | - மீகொல்ல வலவ்வ, மியன தெனிய, பிஹிபுவ |
| ஏ. டபிள்யூ. டபிள்யூ. எல். அபேகுணசேகர | - 10 ஜீ, வாகொல்ல பாதை, லேவெல்ல |
| ஏ. வீ. டபிள்யூ. அபேகுணசேகர | - ஊருகல, மெதமஹநுவர |

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019.05.15 ஆந் திகதி மு.ப 10.00 மணிக்கு உடதும்பர பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019.05.08 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படு கின்றனர். காணி உரிமையை உறுதிப்படுத்துவதற்கு இருக்கும் காணியின் ஒப்பனை அல்லது வேறு ஆவணங்கள் பரிசோதனை செய்யும் திகதியில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

சுஜானி ஆர். விஜேதுங்க,
பிரதேச செயலாளர்,
உடதும்பர.

பிரதேச செயலகம்,
உடதும்பர,
2019, மாச்சு 28.

4 - 646

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: ரபு/574-ஆர்பீகே/எல்ஏஎன்/ஏகியூயூஆர்ஈ/ஏ3/69.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின்
இல.: 4-3/7/2016/HW/57.

இல. 2019/47 மற்றும் 2018.10.03 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் III ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்ட '2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு தும்பனை பிரதேச செயலகத்தில் எம்மை சந்திக்க வேண்டும்' என்று கீழ் குறிப்பிடப்படுமாறு திருத்தப்படுதல் வேண்டும்.

'2018, ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு ரம்புக்கனை பிரதேச செயலகத்தில் எம்மைச் சந்திக்க வேண்டும்' என அறிவிக்கின்றேன்.

டபிள்யூ. எல். ஆர். இந்திக்க லியனகே,
பிரதேச செயலாளர்,
ரம்புக்கனை.

பிரதேச செயலகம்,
ரம்புக்கனை,
2019, மாச்சு 12.

4 - 647

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.